**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**

**முன்னிலை: டாக்டர்.த.பிரபுசங்கர், இ.ஆ.ப.,**

செ.மு.ந.க.எண்.814/அ1/2024.

நாள். 13.03.2024

பொருள்: சமூக நலம் – மாவட்ட சமூக நல அலுவலகம், திருவள்ளூர் – **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013** – பாதிக்கப்பட்ட பெண்கள் எளிதில் புகார் அளிக்க ஏதுவாக கோட்டம் / வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் புகாரினை பெற பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) நியமனம் செய்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை: சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.003325/SHEW/2024, நாள்.07.03.2024.

******

**ஆணை–**

பார்வையில் காணும் கடிதத்தின்படி, **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013–ன்படி** பணிபுரியம் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும்பாலியல் துன்புறுத்தல் குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் எளிதில் புகார் அளிக்க ஏதுவாக கோட்டம் / வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013–ன் கீழ்** திருவள்ளூர் மாவட்டத்தில் கோட்டம் / வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் கீழ்கண்டவாறு பொறுப்பு அலுவலர்களாக (Nodal Officers) நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| S. No | Level | Nodal Officer Designation | Area |
|---|---|---|---|
| 1 | Divisional Level | Revenue Divisional Officer | 1. Tiruvallur<br>2. Ponneri<br>3. Tiruttani |
| 2 | Taluk Level | Taluk Head Quarters Tahsildar | 1. Gummidipoondi<br>2. Ponneri<br>3. Tiruttani<br>4. Pallipettu<br>5. Tiruvallur<br>6. Poonamallee<br>7. Uthukottai<br>8. Avadi<br>9. R.K.pet |
| 3 | Block Level | Block Development Officer | 1. Villivakkam<br>2. Puzhal<br>3. Minjur<br>4. Sholavaram<br>5. Gummidipoondi<br>6. Thiruvalangadu<br>7. Tiruttani<br>8. Pallipet<br>9. R.k.pet<br>10. Tiruvallur<br>11. Poondi<br>12. Kadambattur<br>13. Ellapuram<br>14. Poonamallee |
| 4 | Municipality Area | Municipal Commissioner | 1.Tiruvallur<br>2.Tiruttani<br>3.Tiruverkadu<br>4.Poonamalle<br>5.Thiruninravur<br>6.Ponneri |
| 5 | Town Panchayat Area | Executive Officer | 1. Arani<br>2. Gummidipoondi<br>3. Minjur<br>4. Naravarikuppam<br>5. Pallipet<br>6. Podaturpet<br>7. Thirumazhisai<br>8. Uthukottai |
| 6 | Corporation Area | Assistant Commissioner | 1. Zone 1 – Avadi |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers), 10 நபர்களுக்கு குறைவாக பணிபுரியும் அலுவலகங்கள் அல்லது நிறுவனங்களில் பணிபுரியும் பெண் பணியாளர், பாலியல் துன்புறத்தலால் பாதிக்கப்பட்டு அளிக்கப்படும் புகார்களை பெற்று, உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, 7 தினங்களுக்குள் திருவள்ளூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் உள்ள மாவட்ட அளவிலான புகார் குழுவிற்கு (Local Complaints Committee) அனுப்பி வைத்திட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் தங்களுடைய அலுவலகங்கள் மற்றும் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் தனியார் அலுவலகங்கள், கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 10 எண்ணிக்கைக்கு மேற்பட்ட பெண் பணியாளர்கள் பணிபுரியும் இடங்களில் **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013–ன்** படி உள்ளக புகார் குழு (Internal Complaints Committee) அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து, பெறப்படும் புகார் மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கண்காணித்து அதன் விவரத்தினை தெரிவிக்குமாறு பொறுப்பு அலுவலர்களைக் (Nodal Officers) கேட்டுக்கொள்ளப்படுகிறது.

13/3/24

மாவட்ட ஆட்சியர்,
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers),
திருவள்ளூர் மாவட்டம்.

2/2

நகல்:
சமூக நல ஆணையர்,
சென்னை–05